Registerd as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (10-4-66) இதழ் 62

விசுவாவசு பங்குனி 28 துல்ஹஜ் பிறை 18 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14, டாம் வீதி கொழும்பு

### 5 ஆண்டில் நிரூபிப்போம்

மாஸ்கோ, ஏப். 9

ரஷ்யாவில் அடுத்த ஐந்தாண்டு விண்வெளித் திட்டத்தில், மனிதனை சந்திரனில் இறக்குவது உறுதி என பிரபல சோவியத் விஞ்ஞானி ஒருவர் திட்டவட்டமாகக் கூறினார். திகதி எதுவும் குறிப்பிடமுடியாவிடினும், ஐந்தாண்டுகளில் இந்தச்சாதனை அனைவரும் பார்க்கத்தக்க விதத்தில் நிரூபிக்கப்படும் என அவர் கூறினார்.

# வட்டார விஸ்தரிப்பு

## அமைச்சருக்கு உதவிக் கமிஷனர் கடிதம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகர சபையின் வட்டாரங்களை விஸ்தரிப்பதானால் அதற்கான நடவடிக்கைகளை மே, ஜூன் மாதங்களுக்கு முன்னரே மேற்கொள்ளவேண்டியது அவசியமென்று ஸ்தலஸ்தாபன அமைச்சுக்கும், ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனருக்கும், ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் வடபகுதி உதவிக் கமிஷனர் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

வட்டாரங்களை விஸ்தரிப்பதானால் புதிதாகச் சேர்த்துக்கொள்ளும் வட்டாரங்களின் எல்லைகளையும், பிரிக்கும் வட்டாரங்களின் எல்லைகளையும் நிர்ணயிக்கவேண்டிய வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். புதிய வட்டாரங்களினதும் பிரிக்கும் வட்டாரங்களினதும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென்றும் இதற்கு காரியாதிகாரிகள் மூலம் கிராமசேவையாளர்களைக் கொண்டு பட்டியல் தயாரிப்பதற்கு தேர்தல் அதிகாரி மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உதவி ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது. புதிய வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு குறைந்தது ஐந்து மாதஅவகாசமாவது தேவையெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### ஏர் பிரான்ஸ வேலைநிறுத்தம்

பாரிஸ், ஏப். 9

ஏர் பிரான்ஸ் விமானச் சிப்பந்திகள் 48 மணிநேர வேலைநிறுத்தத்தை நேற்று ஆரம்பித்தனர்.

மலேஷியாவுடன்

# தொடர்ந்து போராட்டம் நடத்துவோம்!

## இந்தோனேஷிய நிலைமை: ஜெனரல் சுகர்டோ அறிவிப்பு

ஜகார்த்தா, ஏப்ரல் 9

இந்தோனேஷியா தொடர்ந்து மலேஷியாவுடன் போராட வேண்டிய நிலைமை இருந்துவருவதாக இந்தோனேஷிய ராணுவத்தளபதி ஜெனரல் சுகர்டோ இன்று அறிவித்தார்.

புதிய இந்தோனேஷியா மந்திரி சபையில் பாதுகாப்பு மந்திரியாக பதவியேற்றிருக்கும் ஜெனரல் சுகர்டோ வெளிநாட்டு நிருபர்கள் மத்தியில் இன்று பேசினார்.

மலேஷியாவுடன் இந்தோனேஷியா தொடர்ந்து போராட வேண்டிய நிலைமை இருந்து வருகின்றது. ஆனால் சமாதான தீர்வுகளை இந்தோனேஷியா எப்போதும் ஏற்றுக்கொள்ளும் என்று ஜெனரல் சுகர்டோ பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். சுகர்னோ தொடர்ந்தும் நாட்டின் தலைவராக இருந்து வருகிறார் என்றும் இந்தோனேஷிய புரட்சியின் மகா தலைவராக அவர் இருந்து வருகிறார் என்றும் ராணுவப் புரட்சி ஏற்பட்டதாக வெளிநாடுகளில் வெளியான செய்திகள் அபத்தம் என்றும் அவர் சொன்னார்.

ஜெனரல் சுகர்டோ மேலும் பேசுகையில் ஐ. நா. சபையில் மீண்டும் சேர்ந்து கொள்வது குறித்து இந்தோனேஷியா ஆலோசித்து வருகிறதென்றும், மலேஷிய சமஷ்டி கலைக்கப்பட வேண்டுமென தமது நாடுவிரும்புகிறதென்றும், பிரிட்டிஷ் தளங்கள் வெளிநாடுகளில் இன்னும் இருந்து வருவது தற்கால போக்குக்கு ஒத்து வராது என்றும் குறிப்பிட்டார்.

# 18 தமிழறிஞர்கள் மலேஸியா செல்வர்

## கோலாலம்பூர் சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு

கொழும்பு, சனி

கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் இலங்கையைச் சேர்ந்த 18 தமிழறிஞர்கள் கலந்துகொள்வார்கள்.

மகாநாடு இம்மாதம் 17-ந் திகதி முதல் 23-ந் திகதி வரை நடைபெறும்.

30 வெளிநாடுகளிலிருந்து இம்மகாநாட்டில் 150 பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள். மலேயாவிலிருந்து 50 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்கள். இந்தியாவிலிருந்து சென்னை முதன் மந்திரி திரு. பக்தவத்சலம் உட்பட, 50 அறிஞர்கள் கலந்துகொள்கிறார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகம், செங்குந்தா மகாவித்தியாலயம் ஆகியவற்றின் விரிவுரையாளர்கள் உட்பட, பிரபல இலங்கைத் தமிழறிஞர்கள் தமிழ் இலக்கியம், சமூக சரித்திரம், மொழி, மொழி பெயர்ப்புத் திட்டம், தென்கிழக்கு ஆசிய சரித்திரம் ஆகியன பற்றி தங்கள் பேருரைகளை மகாநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

# பிரிட்டனில் பிரதமர் நிகழ்ச்சிகளை ரத்து செய்தார்

லண்டன், ஏப். 9

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, பிரிட்டனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எல்லா உத்தியோகபூர்வமான நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டதாக அறியப்படுகிறது.

டாக்டர்கள் ஓய்வு எடுக்கும்படி திரு. சேனநாயக்காவிற்கு தெரிவித்த ஆலோசனையைத் தொடர்ந்தே அவர் இவ்விதம் எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்துள்ளார் எனத் தெரிய வருகிறது.

பிரதமர் இப்போது பூரண சுகத்துடன் இருப்பதாகவும் ஆனால் சிறிது அவதானமாக இருக்கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

# உணவு விவசாய அபிவிருத்திக்கு புதிய பிரிவு

## நீண்ட-குறுகிய கால திட்டங்களை அமுலுக்கு கொண்டுவர ஏற்பாடு

கொழும்பு, ஞாயிறு

நாட்டின் உணவு உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் விவசாய உணவு அமைச்சு புதிதாக திட்டநடை முறைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றது.

இப்பிரிவின் கீழ் நாட்டின் அபிவிருத்தி சம்பந்தமாக நீண்டகால திட்டங்களையும் குறுகிய கால திட்டங்களையும் அமுலுக்கு கொண்டு வரும். இதன் அடிப்படையிலேயே விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டு வந்தார். இதுபோலவே இதர மாவட்டங்களுக்கும் அவர் விஜயம் செய்ய உத்தேசித்துள்ளார். அவர் ஏற்கனவே கண்டி குருநாகல் போன்ற மாவட்டங்களுக்கு விஜயம் செய்துள்ளார்.

அடுத்த 5 வருடகாலத்துக்குள் அமுல் நடத்தப்படவேண்டிய விவசாய உணவுத் திட்டங்கள் குறித்து திரு. பண்டா மாவட்ட அதிகாரிகளுடன் ஆலோசிப்பதில் அதிக அக்கறை கொண்டிருக்கிறார்.

### பத்திரிகை சுதந்திரம்

கொழும்பு, சனி

பாராளுமன்றத்திலும், செனட் சபையிலும், நீதிமன்றங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளை, பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு கிரிமினல் சட்ட திருத்த மசோதாவிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும இதற்கு எதிராக தெரிவிக்கப்பட்டிருந்த அபிப்பிராயத்தை [illegible] இவ்விதம் தீர்மானித்துள்ளார்.

### மரண அறிவித்தல்

உடுப்பிட்டி பராயைச்சேர்ந்த காலஞ்சென்ற காசிநாதர் வல்லிபுரத்தின் மனைவியும், கலா பிஸ்கட்ஸ் உரிமையாளர் நடேசலிங்கம் J. P., இராசம்மா, ஆகியோரின் தாயாரும், விசுவநாதர் சின்னத்துரையின் மாமியும் ஆகிய ஆசைப்பிள்ளை அவர்கள் காலமாகி விட்டார். அன்னாரின் பூதவுடல் இளங்காடு மயானத்திற்கு ஞாயிற்றுக்கிழமை (10-4-66) காலை 9 மணியளவில் தகனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதை உறவினர்களும், நண்பர்களும் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: வ. நடேசலிங்கம் J P 122

புதுவருஷப்பிறப்பை முன்னிட்டு

விசேஷ மலிவு விற்பனை

தொலைபேசி: 7107. T'gram: GEEPEETEE.

புதுவருஷப்பிறப்பை முன்னிட்டு
புதிதாக இறக்குமதிசெய்த ஜவுளித் தினுசுகள்

ஞானபண்டிதன்

ஜவுளிக்கடை

228, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

சில்க் சாறிகள், நைலெக்ஸ் சாறி, லிம்பிரிக் சீத்தை,
நைலோன் சேட், திறம் பட்டு வேட்டி சால்வை செற்,
(150/- ல் இருந்து 200/- வரைக்கும்)
901 மல்வேட்டி ரூபா 8-40.
வாயில் சாறி ரூபா 13-25.
மற்றும் பிடவைத் தினுசுகளும் விலை சகாயமாக
(கூப்பன் இல்லாமல்)
பெற்றுக்கொள்ளலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்! (120)

வடமராட்சி வாழ் மக்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

C. W. E. புடவைகள் கூப்பனுடன்
கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்

சீப்சைட்

(சி. டபிள்யூ. ஈ. அங்கீகாரம் பெற்ற புடவை வியாபாரிகள்)

பிரதான வீதி, — பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வாக்குறுதியை என்றும் நிலைநாட்டுங்கள்; காற்றில் பறக்கவிட்டுவிடாதீர்கள். உயிருக்கு ஆபத்து வந்தபோதிலும் அதனைக் கடைப்பிடியுங்கள். பரிசுத்தமானதும் உண்மையானதுமான ஒரு வாக்குறுதியைகாப்பாற்றுவதற்காகஉயிர் நீத்தல் சாலச்சிறந்தது. வாக்குறுதி கொடுக்குப்பொழுது தாமதப்படுத்திக் கொடுங்கள். அப்படி கொடுக்கும் வாக்குறுதியை கெதியாக நிறவேற்றுங்கள்.

— சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box [illegible], JAFFNA
Telegrams: EELA NADU [illegible]

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண் பங்குனி மீ 28 உ (10-4-66)


## தென்வியட்நாம் கிளர்ச்சி

தென்வியட்னாமில் தோன்றியுள்ள கிளர்ச்சிகளும் பலாத்கார சம்பவங்களும் வியட்னாம் சம்பந்தமாக அமெரிக்காவும் தென்வியட்னாம் அரசாங்கமும் பின்பற்றும் கொள்கைகளில் உடனடியாக மாறுதல் செய்துகொள்ளவேண்டிய அவசியத்தை உணர்த்துவதாக உள்ளன.

தென்வியட்னாமின் தலைநகரான சைகோனிலும் அமெரிக்கத் துருப்புக்களின் பிரதான பாசறை அமைக்கப்பட்டுள்ள டானங்கிலும் மற்றும் ஹியூ என்னும் முக்கிய இடத்திலும் சென்ற சில தினங்களாக பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களைத் தொடர்ந்து பொதுமக்களும் பௌத்த தலைவர்களும தென்வியட்னாம் இராணுவ அரசாங்கத்துக்கு எதிராகவும் அமெரிக்காவுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும நடத்திவருகின்றனர். அமெரிக்காவின் ஆயுத பலத்தை நம்பியிருக்கும் தென்வியட்னாம் இராணுவ அரசாங்கத்தின் பிரதமரிகி, நிலைமையை உணர்ந்து, விரைவில் மக்கள ஆட்சி அமைக்கப்படுமென உறுதியளித்திருக்கிறார்.

தெனவியட்னாமில் அமைதியும் சமாதனமும் நிலவவேண்டுமென்ற தென்வியட்னாம் மக்களின் கோரிக்கைக்கு இராணுவ ஆட்சியின் தலைவர் இணங்க வண்டிய நிர்ப்பந்தத்தைமக்களும், மாணவர்களும், சமயத் தலைவர்களும் ஏற்படுத்திவிட்டனர்.

தென்வியட்னாம் மக்களை கம்யூனிஸ ஆபத்திலிருந்து காப்பாற்றுவதும் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதுமே தங்கள் கடமையும் பொறுப்பும் என்று கூறிவரும் அமெரிக்காவும், அமெரிக்காவின் உதவியுடன் கம்யூனிஸ்டுகளின் நாடு பிடிக்கும் ஆசையை முறியடித்துதென்வியட்னாமைப் பாதுகாப்பதே தங்கள் தலையாய கடமையெனக் கூறிவரும் டின்டியம் முதல் கீ வரையிலான தென்வியட்னாம் ஆட்சியாளருக்கும் தென்வியட்னாம் மக்கள் தங்களுக்கு வேண்டியது அமைதியும், சமாதானமும், நல்வாழ்வும், நல்லரசாங்கமுமேயென்பதை மிகத்தெளிவாக உணர்த்திவிட்டனர்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதிலும் ஜனநாயக மக்களைப் பாதுகாப்பதிலும் அமெரிக்காவுக்கும் தென்வியட்னாம் அரசாங்கத்துக்கும் பொறுப்பும் கடமையுமிருக்கலாம். ஆனல் தென்வியட்னாம் மக்கள் தங்கள் எதிர்காலத்தையும் வாழ்வையும் நிர்ணயித்துக்கொள்வதற்கு, அவர்களுக்கு அதிகபொறுப்பும கடமையும் மட்டுமல்ல உரிமையும் இருக்கிறது.

தென்வியட்னாம் மக்கள் தங்கள் விருப்பத்தைத் தெளிவாகத் தெரிவித்த பின்னரும் பிடிவாதமாக தங்கள் கொள்கையை நிறைவேற்ற நினைப்பது அமெரிக்காவுக்கும் நல்லதல்ல; தென்வியட்னாம் ஆட்சியாளருக்கும் நல்லதல்ல. எனவே இனியாவது அமெரிக்கா, குண்டு வீசுவதை நிறுத்திக்கொண்டு, அமெரிக்கத் துருப்புக்களின் நடவடிக்கையையும் குறைததுக்கொண்டு, வியட்னாம் மக்களே தங்கள் விவகாரங்களுக்குத் தீர்வுகாண்பதற்கு, வடக்கு வியட்னாம், தெற்கு வியட்னாம், வியட்காங்கியர் ஆகிய பிரச்னையில் சம்பந்தப்பட்ட முத்தரப்பினரும் சந்தித்துப்பேசி முடிவு காண அமெரிக்கா வழிகாட்டுவதே சிறந்தது. அமெரிக்க மக்களும் இதை மகிழ்ச்சியுடன் வரவேற்பர்.

## உலகத்தமிழ்விழாவில் கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் அகில உலகத் தமிழ் ஆராய்ச்சிவிழாவில் மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றம சார்பிலும், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் சார்பிலும் வித்துவான் வ. செல்லையா கலந்துகொள்வார். கடந்த புதன் கிழமை இவர் புகையிரதம் மூலம் பயணமானர்

## உயிரோடெழுந்தார் ஜெயமே

### பல்லவி

இராகம்:-பியாக். தாளம்:-ஆதி.

வானோர் பூவோர் கொண்டாட
மனுவே வுயிரோ டெழுந்தார் ஜெயமே.

### அனுபல்லவி

தீன தயாளர் திருமறைநூலர்
திரி புவனங் களால் செங் கோலர்
ஞான சுசீலர் நரரனு கூலர்
நடுவிடவே வரு பூபாலர்

### சரணங்கள்

அலை கையை ஜெயித்தார்
அருண் மறை முடித்தார்
அருமலர்க்கா காவலை யொழித்தார்
நிலைதிரை கிழித்தார் தடைச் சுவரிடித்தார்
நேராய்த் தரிசனந் தர விடுத்தார்.

செத்தோ ருயிர்த்தார், திருநகர் பூத்தார்
தேடற் கரியதோர் காட்சி வைத்தார்
மற்றோர் பார்த்தார், மலைவுகள் தீர்த்தார்.
மரித்தோர் முதற்பலனாய்ச் செழித்தார்.

அடியவர் கண்டார் ஆர்துயர் விண்டார்
அருமறைக் கருத்தா ராய்ந்தே நின்றார்
மடமை யகன்றார், மயக்கமே கொன்றார்
வானனந்தமே மனங் கொண்டார்.

## 'காரைக்காலம்மையார் போன்ற பெண்கள் தோன்றவேண்டும்'

கைதடி, சனி

'உலகில் பிறந்த மக்களெல்லாம் நாம் பிறவியெடுததனல் அடைய வேண்டிய பயன் என்னவென்றுசிந்திக்கவேண்டும்.'

இவ்வாறு கைதடி இடுங்கித்தோட்ட கந்தசுவாமி கோவில் முன்றலில நடைபெற்ற காரைக்காலம்மையார் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய ஆலயப் பிரசாரகர் திரு. சி. சரவணமுத்துகூறினர்.

திரு. சரவணமுத்து மேலும் பேசுகையில் கூறியதாவது:—

பொறிகளின் வழியாக அடையக்கூடிய இன்பம் சிறியது. துன்பத்தோடு கூடியது. கடவுளிடத்துச் செலுத்தும் அன்பினல் வருவது பேரின்பம் காரைக்காலமமையார் இறைவனின் ஆருத அன்பைவேண்டிநிற்கின்றார். நம்நாட்டில் காரைக்காலம்மையார் திலகவதியார் போன்ற பெண்மணிகள் தோன்றவேண்டும். அது பெண்குலத்துக்கும் நாட்டுக்கும் சிறப்புத்தரும்.

இறைவனை உண்மை அன்பினல்தான் அடையமுடியும்.

பிரம்மஸ்ரீ சு. செல்லத்துரைக்குருக்கள் சுமார் இருபத்தைந்து சைவ அன்பர்களுக்கு சமயதீட்சை வைத்துப்பேசுகையில், சுத்தமான தேகத்தில்தான் சுத்தமான மனதிருக்கும் என்றும் ஆலயங்கள் சுத்தமாக இருத்தல் அவசியமென்றும் சைவசமயத்தவர் எல்லோரும் சமய தீட்சை பெறவேண்டுமென்றும் கூறினர்.

(6 ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

இலங்கை வாழ் மகாஜனங்களில் நூற்றில் ஒருவருக்கு மனநோய் இருந்ததாம். ஐயா, இதை நீங்கள் நம்புவீர்களா? மனநோய் என்றால் ஒரேயடியாக வெறும் விசர் என்பதல்ல. மன நாயில் பல விதமான கட்டங்களும், கோணங்களும் இருக்கின்றன. கால் விசர், அரை விசர், முக்கால் விசர், முழு விசர் என்று சிலர் இந்த மனநோயைப்பிரிப்பார்கள். இவற்றுக்கு வேறு பொருத்தமான பெயர்களுமுண்டு. மேல்வீடு பழுது, ஒரு ஸ்குரூ லூஸ், சுத்தாத்தோட்டத்து வெருளி, மூளைக்கு சுகவீனம் மண்டைக் குழப்படி என்று பல தினுசுகள்

இந்தவகையருக்களில்தான் நூற்றுக்கு ஒருவரை இலங்கையில் சந்திக்கலாமென்று இலங்கை மன சுவாத்திய சங்கம் சில பல ஆராய்ச்சிகளுக்குப்பின் கண்டுபிடித்திருக்கிறது. நல்லவேளையாக இவர்கள் எல்லோரும் துலாங்கில் போட்டு பூட்டி வைக்கவேண்டிய முழுப் பைத்தியங்கள் அல்ல. அப்படியிருக்குமாகில், இலங்கையின் ஜனத்தொகை 11,000,000 என்று வைத்துக்கொண்டால், ஒரு லட்சத்துப் பத்தாயிரம் பேர் பைத்தியக்காரராகிவிடுவோம். இவர்கள் எல்லாரையும் அடைத்துவைத்து சிகிச்சை செய்ய ஓர் அங்கொடை போதாது ஓராயிரத்து நூறு அங்கொடையாவது வேண்டும்.

அதிருக்கட்டும் ஐ[illegible] படியெல்லாம் [illegible] குழப்பக் கூடிய தகவல்களைத் தரும் என்னைச் 'சடையாக ஸ்குரூலூஸ்' என்று நினைக்கிறீரோ இல்லையோ, உண்மையைச் சொல்லும். அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னத்துக்காக என்று நினைக்கிறீர்? நீரும் அந்த நூற்றிலொருவர் என்று நான் நினைக்கிறபடியாலதான். இப்பொழுது தெரிகிறதா யாருக்கு லூஸ் எனறு?

இந்த மனநோய் இருக்கிறதே, அது ஒரு விசித்திரமான பொருள். எனக்கு மனநோய் இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனல் உண்மையில் உங்களுக்குத்தான் விசர் என்று நான் நினைத்துக் கொண்டிருப்பேன். காரசாரமான வ்வாதங்கள் நடக்கும்போது கவனித்திருப்பீர்களல்லவா? ஒருவர் மற்றவரைப் பார்த்து 'உமக்கென்ன விசரோ' என்று கேட்பார். அதற்கு மற்றவர் 'ஆருக்கு விசர் என்று தெரியேல்லை' என்பார்.

உண்மை ஒன்றைச் சொல்லுகிறேனே உங்களுக்கு. இலங்கையிலுள்ள நூறுவரில் ஒருவருக்கு மனநோய் இருக்கிறதென்று கண்டுபிடித்தார்களே— அவர்களுக்குத்தான் மூளை [illegible] தான் [illegible]றேன். இதை அவர்கள் மறுக்க முடியுமா? எப்படி மறுப்பார்கள்? அவர்களோ நானோ மனநோயால் பீடிக்கப்பட்டிருப்பதென்பதை நடுநின்று சொல்பவர் யார் என்று கேட்கிறேன். அப்படி சொல்லக்கூடியவரையே 'லூஸ்' என்று நான் சொன்னல் அதை மறுத்து அவர் என்ன ஆதாரங்களை எடுத்துக் காட்டுவார்? சுருங்கச் சொன்னல் ஒருவர் எள்ளளவேனும் மனநோய் இல்லாதவர் என்பதை எந்த அளவு கோலால் நிர்ணயிக்க முடியும்? அவரிடம் என்னென்ன இயல்புகள் இருக்க வேண்டும், எவை இருக்கப் படாது என்று வரையறுப்பவர் யார்?

குளிக்கும் அறைக்குள்ளிருந்து கொண்டு நான் உரக்கப் பாடினல் நான் லூஸா? உலக வாழ்வைத் துறந்து கோவணாண்டியாய் திரியும ஞானி விசரனா அல்லது அவர்மீது கல்விட்டெறிபவருக்கு விசரா?

எல்லாம் வல்ல இறைவனையே 'பித்தா' என்றழைத்தார் சுந்தரமூர்த்தியார். இறைவனும் அந்த அடைமொழியையே விரும்பி, 'பித்தா' என்று சொல்லிப் பாட்டுப் பாடு என்று கட்டளையிட்டார் எம்பெருமானே விசரனாய் இருக்க விரும்பினரென்றால் உலகம் முழுவதுமே ஒரு பெரிய பைத்தியக்கார உலகமல்லவா?

- வழிப்போக்கன்

## ஐயாறன் எழுதுகிறது

அன்று மாசி மகமாம். நடராஜப் பெருமானுக்கு வருடத்தில் 6 அபிஷேகங்களில் ஒன்றென்று அறிந்ததும், ''என்னே நின் பேரருளே'' என்று என் உள்ளம் வாழ்த்தியது. முன்கூட்டித்திட்டம் எதுவும் போடவில்லை. அபிஷேகத்தைக் காணவேண்டுமென்று வெகு நாள் ஆவல். எப்படி, எப்போது அவன் நம் விருப்பத்தை நிறைவேற்றுகின்றான்!

கனகசபையிலே சிவகாமசுந்தரியுடன் நடேசப்பெருமான் முன்வந்து பீடத்தில் அமர்ந்துள்ளார். பல அண்டாக்களில் பால், தயிர் தேன், பன்னீர், பஞ்சாமிர்தம், இளநீர், முதலியன தயாராகவுள்ளன. வெள்ளிக்குடங்களிலே பாலை எடுத்து எடுத்து அபிஷேகம் செய்கிறார்கள். அக்காட்சி நம்மன மாசுகளை நீக்கி உள்ளத்தைக் குளிரவைக்கின்றது. அவ்வளவு பால் எங்கிருந்துதான் வந்ததோ!

ஏழைக்குழந்தைகள், பால் இல்லாமல் தவிக்கையில் இவ்வளவு பாலையும் வீணக்குவதா என்று பகுத்தறிவாளர் கேட்கலாம். ஆனல் அந்தப் பால், தயிர் முதலியன ஒரு சிறிதும் வீணக்கப்படவில்லை. நடேசபபெருமானுக்கு அபிஷேகமான அந்தப்பால்முதலியனபுனிதமடைகின்றன. அவற்றை எல்லாம் அப்படியே பிடித்து வைத்து, வந்த பக்தர்களுக்கெல்லாம் தீட்சதர்கள் விநியோகம் செய்கிறார்கள். இதனல் உடல்மட்டுமன்றி நம் உள்ளமும் புனிதமடைவதாக உணர்ந்தேன். இறைவன் பெயரால் ஏராளமான பால் முதலியவற்றைச் சேர்த்து, பொதுமக்களுக்கு இலவச விநியோகம் செய்யும் ஏற்பாடு எவ்வளவு சிறந்தது! ஏழைக்குழந்தைகளுக்குப் பால் வேண்டுமென்றால் யாரும் இக்காலத்தில் கொடுப்பார்களா? ஆனல் கோவிலுக்கென்றால் எவ்வளவு பால் சேருகின்றது! ஆகவே நம்மக்களின் பக்தியைப் பயன்படுத்தி, கோவில்கள்மூலம் எவ்வளவு முக்கியமான சமூக சேவைகளைச் செய்யலாம்! நம் இளம் பகுத்தறிவாளர் சற்றே சிந்திக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

பூசை முடிந்து, கூட்டமும் மெதுவாகக்கலைந்தது. ஒரு தீட்சதரிடம் பேசிக்கொண்டிருந்தேன். முன்னர் மூவாயிரம் தீட்சதர்கள் இருந்த சிதம்பரத்தில் இப்போது 350 பேர் தான் உள்ளனராம். தமிழகத்தில் மற்றக் கோவில்களெல்லாம் இந்து தர்ம பரிபாலன சபை ஆட்சிக்கு உட்பட்டுள்ளபோது, இக்கோவில் மட்டும் தீட்சதர்கள் நிர்வாகத்திலேயே இருந்து வருகின்றது. ஜீவனத்துக்கான போதிய வருமானம் கிடைக்கிறதாவென்று கேட்டதற்கு, சாப்பாட்டுக் குறைவில்லை என்றும் ஆனல் அதிகப்படி செலவுக்குத்தான் போதாதென்றும், நடேசப்பெருமானை நம்பி வாழ்பவருக்கு ஒரு குறையுமில்லையென்றும் சொன்னதைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது.

ஓர் அர்ச்சனைக்கு இரண்டரைரூபாய் தட்சணை கேட்கின்றனர். சென்னையிலிருந்து வந்த ஓர் ஏழைத் தாய்க்கு இது தெரியாது. அரை அல்லது ஒரு ரூபாய் இருக்குமென்று நினைத்து, காளாஞ்சித் தட்டைத் தீட்சதரிடம் கொடுத்தப்ன், தட்சணைக்குப் போதிய பணமின்றித் திகைத்துப் போனர். கொண்டுவந்த

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைகோனில் மோசமான அமெரிக்க எதிர்ப்புக் கலகங்கள்

## கைக்குண்டு வீச்சினால் பல அமெரிக்க துருப்புகளுக்கு காயம்

### டாணுங்கிலிருந்து யு. எஸ். சிவிலியன்கள் வெளியேற்றம்

சைகோன், ஏப் 9

சைகோனில் நேற்று அமெரிக்கருக்கு எதிராகநடைபெற்ற மோசமான கலகங்களினால் பல அமெரிக்க துருப்புக்கள் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இதுவரை சைகோனில் ஏற்பட்ட அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிலேயே இதுதான் மிக மோசமானது என்றும் அறிவிக்கப்பட்டது.

மாணவர்களிடம் அகப்பட்டிருந்த துருப்பினரை விடுவிக்கும்பொருட்டு அமெரிக்கராணுவ பொலிசார் அழைக்கப்பட்டனர். அமெரிக்கர் வசித்த இல்லங்களை சூறையாடிய மாணவர்களை கலைக்க அரசாங்கத் துருப்புக்கள் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தன.

தென் வியட்நாமில் பொதுத்தேர்தல் நடத்துவதுபற்றி ஆலோசிக்குமுகமாக அடுத்தவாரம் முக்கிய கூட்டம் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தும் இவ்விதச் சம்பவங்கள் இடம்பெற்றன.

பௌத்தபிக்குகளே இந்த ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிவிட்டனரென்றும் கூறப்பட்டது.

பௌத்ததலைவர்களுக்கும் அரசாங்கத் துருப்புக்களுக்குமிடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தை மாணவர்கள் நிராகரித்ததுடன், தேர்தல் நடத்த 6 மாதகாலம் நிர்ணயித்திருப்பது மிக நீண்டது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

இதற்கிடையில் டாணுங்கில் அரசாங்கத்தின்மீது அவநம்பிக்கை தெரிவிக்கும் அறிக்கை ஒன்றை ராணுவத் தலைவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அங்கு ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பை அடுத்து அமெரிக்க சிவிலியன்களையும், கடமையில் இல்லாத ராணுவத்தினரையும் வெளியேற்றும் முயற்சியில் அமெரிக்கவிமானப் படை விமானங்கள் ஈடுபட்டிருக்கின்றன.

ஹூவே நகரிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

சைகோனில் கைக்குண்டுகள் வீசப்பட்டது காரணமாக பல அமெரிக்கத் துருப்புக்கள் காயமடைந்தனர்.

## பாப்பரசர் பாதம் கழுவினர்

வத்திக்கான், ஏப். 9

புனிதவெள்ளிக்கிழமையை முன்னிட்டு போப்பாண்டவர் பால் 10 சிறுவர்களின் பாதங்களுக்கு நீர்விட்டுக் கழுவினார்.

ஜெருஸலம் பழைய நகரில் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களும் உல்லாசப் பிரயாணிகளும் சடங்குகளில் கலந்துகொண்டனர்.

மேற்கு பேர்லின் மக்கள் கிழக்கு பேர்லினுக்குச் சென்று தங்கள் உறவினருடன் ஈஸ்டரைக் கழித்தனர்.

## ஒழுங்குவிதிகளை மீறுபவர் வேலைநீக்கம் செய்யப்படுவர்

### ஆசிரியர்களுக்கு கல்விமந்திரியின் எச்சரிக்கை

களுத்துறை, வெள்ளி

'ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிக்காத ஆசிரியர்கள் இனி தற்காலிகவேலைநீக்கம் செய்யப்படமாட்டார்கள். அவர்கள் ஒரேயடியாக வேலைநீக்கம் செய்யப்படுவார்கள். இவ்விதம் இவர்களை வேலைநீக்கம் செய்யும் உரிமை கல்லூரி அதிபர்களுக்கும் பல்கலைக்கழக அதிபர்களுக்கும் கல்வி இலாகா அதிகாரிகளுக்கும் அதாவதுவித்தியாதிபதிபோன்றவர்களுக்கும் இவ்வித அதிகாரங்கள் வருங்காலத்தில் வழங்கப்படும்'.

இவ்வாறு கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர் ஏ இரிய கொல்லை தெரிவித்துள்ளார்.

பாலிகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப்போட்டிப் பரிசளிப்புவிழாவில் பேசுகையிலேயே கல்வி மந்திரி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

கூட்டுக்கல்வி நான்காம் வகுப்புடன் நிறுத்திக் கொள்ளவேண்டியதே.

இப்போதைய நிலைமையை ஆராயும்பொழுது இந்தமுடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. ஒழுக்கத்தின் தரம் இப்போது வெகுவாகக் குறைந்துவருகிறது இதனாலேயே இந்தமுடிவு செய்யப்படவேண்டியது அவசியமாகிறது

அநேக ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதிலும் ஓய்வுபெற்றபின் தமது பென்ஷனைப்பெறுவதிலுமே அதிக அக்கறை காட்டுகிறார்கள் என்றும் ஆசிரியர்கள் பொறுப்பின்றி நடந்து கொள்வதால் மாணவரின் கல்வியை இது வெகுவாகப் பாதிக்கிறதென்றும் கல்வி மந்திரி குறிப்பிட்டார்.

## நாஸர் கொலை முயற்சி விசாரணை

கெய்ரோ, ஏப்ரல் 9

ஜனாதிபதி நாஸரைக் கொலைசெய்ய முயன்றதாக முஸ்லிம் சகோதரத்துவசங்கத்தைச் சேர்ந்த 43 பேர் மீதான விசாரணை இன்று ஆரம்பமாகியது

## ஹாங்காங்கில் அமைதி

ஹாங்காங், ஏப்ரல் 9

கடந்த மூன்று இரவுகளாக கலவரம் நடைபெற்ற ஹாங்காங் கோலூன் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதை அடுத்து நிலைமை அமைதியாக இருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

## சீன எதிர்ப்பியக்கம் நடத்த இந்தோனேஷியா முடிவு

### ரேடியோவும், பத்திரிகைகளும் பிரசாரத்தில் ஈடுபடும்

ஜாகர்த்தா, ஏப். 9

இந்தோனேஷிய ரேடியோவும், செய்திப்பத்திரிகைகளும் சீன எதிர்ப்பு பிரசார இயக்கத்தை தொடங்குவதென முடிவுசெய்திருக்கின்றன.

பீகிங் ரேடியோ இந்தோனேஷியாமீது தொடர்ந்து எதிர்ப்பிரசாரம் நடத்திவருவதை முறியடிக்குமுகமாக இந்த மாற்றுப்பிரசார இயக்கத்தை ஆரம்பிப்பதென முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

இதற்கிடையே, இந்தோனேஷியாவில் நடைபெறும் சீன எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை பீகிங் ஆட்சேபித்திருக்கிறது.

இந்தோனேஷிய வலதுசாரி சக்திகள் போர்மோஸாவுடன் கூட்டுசேர்ந்து இவ்வித ஆர்ப்பாட்டங்களை நடத்திவருவதாக சீனா குற்றஞ்சாட்டியுள்ளது

அதேசமயம் மாஸ்கோவில் நடைபெற்றசோவியத் காங்கிரஸ்மீதும் சீனா கண்டனங்களைப் பொழிந்திருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்திய நலன்களுக்கு ரஷ்யா உதவிபுரிகிறதென பீகிங் குற்றஞ்சாட்டியுள்ளது.

பதிலாக, சீனாவின் கொள்கைகளை மாஸ்கோ கம்யூனிஸ்ட் மகாநாடு கண்டித்துள்ளது. அதேசமயம் அந்நாட்டுடன் பேச்சு நடத்த கதவு திறந்து வைக்கப்பட்டிருப்பதற்கு எல்லா பிரதிநிதிகளும் ஆதரவு தெரிவித்தனர்.

## தாய்லாந்து தூதரகத்தில் கணக்கு ஊழல்

பேங்காக், ஏப்ரல் 9

ஆசியாவிலுள்ள 11 தாய்லாந்து தூதராலயங்களில் கணக்குகளைப் பரிசோதிக்க ஆடிட்செலவு சுமார் 60 000 ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கணக்கு விதிகளின்படி கணக்குகளைச்சரியாக வைத்திருக்க தூதராலய அதிகாரிகளுக்கு உதவி செய்யப் போவதாக தேசிய ஆடிட் சபை வட்டாரங்கள்கூறின.

கணக்குவிஷயத்தில் அனுபவம் இல்லாததால் பெரும்பாலான தூதராலய கணக்குகள் சரியாக வைக்கப்படவில்லை என அது கூறியது.

பர்மா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலுள்ள தாய்லாந்து தூதராலய கணக்குகள் பரிசோதிக்கப்பட்டன. ஒரு தொகையான ஆடிட்டர்கள் பிலிப்பைன்ஸ், தைப்பே, ஜப்பான் ஆகிய நாடுகளுக்குப் புறப்படவிருக்கிறார்கள்.

(பி டி ஸி)

## 15,000 பேர் குறைக்கப்படுவர்

வாஷிங்டன், ஏப். 9

ஐரோப்பாவிலுள்ள தனது ராணுவ வீரர்களில் 15,000பேரைக் குறைத்துக் கொள்ளப்போவதாய் அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

ரொடீஷியா

## பாதுகாப்பு சபையில் ஆங்கிலோ-அமெரிக்கர் சலசலப்பு

### எண்ணெய் பற்றி போர்த்துக்கல் புனராலோசனை செய்யும்

நியுயோர்க். ஏப்ரல் 8

ரொடீஷியாவுக்கு எண்ணெய் சப்ளை போவதை பலாத்காரத்தை உபயோகித்துத் தடுக்க அனுமதி பெறுவது சம்பந்தமாக பாதுகாப்புசபையை உடனடியாகக் கூட்டவேண்டுமென்ற பிரிட்டனின் இரண்டாவது கோரிக்கையையும் சபைத் தலைவர் கீட்டி நிராகரித்த செயல் ஆங்கிலோ – அமெரிக்க பிரதிநிதிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியது.

ஆபிரிக்கப் பிரதிநிதிகளுடன் இவ்விஷயம் பற்றி ஆலோசிக்க வேண்டியிருந்ததாலேயே திரு. கீட்டி (மாலிபிரதிநிதி) கூட்டத்தை உடனடியாக நடத்தவில்லை என்றும், எனினும் சபை இன்றிரவு 9 மணிக்குக் கூடும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சபையின் பெரும்பான்மைப் பிரதிநிதிகள் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தவேண்டும் என விரும்பியதாயும், ஆனால் சபைத் தலைவர் உடனடியாகக் கூட்ட மறுத்தது ஐ. நா. சட்ட அமைப்பில் நெருக்கடியை உண்டுபண்ணியதாயும் அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட்பர்க் கூறினார்.

### போர்த்துக்கல் புனராலோசனை

இதற்கிடையில் பிரிட்டனின் புதிய நடவடிக்கையைத் தொடர்ந்து, ரொடீஷிய எண்ணெயைமொஸாம்பிக் [illegible] ...யைப் புனராலோசனை செய்யவிருப்பதாய் போர்த்துக்கல் அறிவித்துள்ளது.

### 2-ம் கப்பல் போகவில்லை

அதேசமயம் பைரா துறைமுகம்சென்ற இரண்டாவது கப்பல், கிரேக்க அரசாங்கத்தின் உத்தரவுக்கிணங்க இப்போது தன் போக்கை மாற்றிக்கொண்டு தென்னபிரிக்கா வழியாக ரோட்டர்டாமுக்கு சென்றுகொண்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்பு சபைக்கு பிரிட்டன் சமர்ப்பித்துள்ள யோசனை வேறு போக்குக் காட்டும் தந்திரம் என்றும், ரொடீஷியா விஷயத்தில் இன்னும் வன்மையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆபிரிக்கநாடுகள் கருதுகின்றன.

### கண்காணிப்பு

எண்ணெய்த்தடையை, கப்பல்கள் ஏதாவது மீறுகின்றனவா என பிரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் இப்போது கண்காணித்துவருகின்றன.

## எம். பி.க்கள் கிரிக்கெட்

புதுடில்லி, ஏப். 9

பார்லிமெண்ட் அங்கத்தினர்களின் கிரிக்கெட் போட்டியொன்றைப் பிரதமர் இந்திரா காந்தி இன்று துவக்கிவைத்தார்.

இந்தப் போட்டி பிரதமர் கோஷ்டிக்கும், உப ஜனாதிபதி கோஷ்டிக்குமிடையே நடைபெற்றது.

இதில் வசூலாகும்தொகை ஊனமுற்ற பார்வையற்ற குழந்தைகளின் நலன்களுக்காகச் செலவிடப்படும்.

நேற்று பம்பாயில் முதல் மந்திரிகோஷ்டிக்கும் மேயர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் 59 லட்சம் ரூபாய் வசூலாயிற்று.

## நாகா-பிரதமர் சந்திப்பு

புதுடில்லி, ஏப். 9

திரு. குசாடோ சுகாஸ் தலைமையில் வந்துள்ள பகைநாகர் பிரதிநிதிகள் பிரதமர் இந்திராகாந்தியை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தினர். நாகா அமைதிக் குழுவைச் சேர்ந்த திரு. விஷ்ணு சகாய் முதல் மந்திரி சாலிகா ஆகியோரும் உடனிருந்தனர்.

அஸ்ஸாம் கவர்னரும், முதன்மந்திரி சிறுஆலோவும் பிரதமருடன் நாகா பற்றி ஆராய்ந்தனர்.

## மைசூருக்கு 537 கோடி

பெங்களூர், ஏப் 9

4ம் திட்டத்தில் மைசூர் 537 கோடி ரூபாய் செலவிடுமென அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடப் பிறப்பன்று பிரதமர் நாடு திரும்புவார்

## வெளி நாடு சென்றுள்ள மந்திரிகள் எம். பிக்கள் விபரம்

கொள்ளுப்பிட்டி, வெள்ளி

இப்பொழுது லண்டனில் தங்கியிருக்கும் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா 14-ந் புதுவருடப்பிறப்பான திகதி வியாழக்கிழமை தான் கொழும்பு வந்துசேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

தபால் தந்தி மந்திரி திரு. மொண்டேக் ஜயவிக்கிரமாவும் இப்பொழுது லண்டனில் தங்கியிருக்கிறார். இவர்கள் இருவரையும் தவிர வெளிநாடு சென்றிருக்கும் மந்திரிகள், எம்.பி.க்கள்வருமாறு:-

திரு. மைத்திரிபால சேனநாயகாவும் திரு. ஈ. எல். சேனநாயகாவும் கான்பராவில் பார்லிமெண்டரி யூனியன் மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர். திரு. பீட்டர் கெனமனும், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவும் மாஸ்கோவில் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் கலந்துகொள்கின்றனர். திரு ஸ்டான்லி திலகரத்தினவும், திரு. பி. பி. ஜி. கலுகல்லேயும் சிங்கப்பூரிலிருக்கின்றனர். திரு. எஸ். தொண்டமான் இந்தியா சென்றிடக்கிறார்

கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன இத்தாலியிலிருக்கிறார். தொழில் வீடமைப்பு அமைச்சர் ஜனாப் எம். எச் முகம்மது மெக்கா சென்றிருக்கிறார்.

உதவி நீதிமந்திரி ஜனாப் எம். எச். நயினாமுகம்மது நாளை லண்டன் செல்கிறார்

இவர்கள் தவிர தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ள மற்றும் சில எம். பி.க்கள் விரைவில் மலாயா புறப்படவிருக்கின்றனர்

நாளை சனிக்கிழமை திருமணம் செய்துகொள்ளும் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை இம்மாதம் 18-ந் திகதி தமது மனைவியாருடன் மலாயா செல்லவிருக்கிறார். மலாயாவிலும், இந்தியாவிலும் தேன்மதிகளித்துவிட்டு ஒரு மாதத்தின்பின் இலங்கை திரும்புவர்.

இதேசமயம் இந்திய ராஜ்யசபைத் தலைவரின் அழைப்பையேற்றுஇலங்கையிலிருந்து பத்து எம். பிக்கள் விரைவில் இந்தியா செல்லவிருக்கின்றனர்.

# 'உள்ளத்தை பண் படுத்தி உயரச் செய்வது இலக்கியம்'

சுன்னாகம், சனி

'மனிதன் மனிதனாக வாழ்ந்து, மஹாத்மாவாக உயர்ந்து, அமரனாக நிறைவுந்து, பெறுவதற்குத் துணைபுரியும் உயர்ந்தசிந்தனையின் சிறந்த சொல்லு நவமே இலக்கியம். மண்ணிலே விண்ணைக்காண வழிவகுப்பது இலக்கியம். மனிதர்களை நல்லவர்களாக ஆக்கும் சக்தி இலக்கியத்துக்கு உண்டு. மனிதஇதயத்துடன் நேரடித் தொடர்புடையது இலக்கியம். உள்ளத்தைப் பண்படுத்தி உயரச் செய்வது இலக்கியம். இத்தகைய இலக்கியத்தின் ஓர் உட்பிரிவுதான் சிறுகதை. சிறுகதையை இலக்கியமென்ற செம்மொழியால் அழைப்பதற்குச்சிலர் தயங்கினாலும் சிறுகதையும் இலக்கியமே என்பதை இன்று படித்த பண்டிதர்கள் பலரும் ஒப்புக்கொள்கிறார்கள்' என சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விடுதி மாணவர் மத்தியில் பேசும்போது திரு. சி. சரவணபவன் குறிப்பிட்டார்.

மாணவர் மன்றத் தலைவர் செல்வன் சி. கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 'சிறுகதை இலக்கியம்'பற்றி திரு. சரவணபவன் மேலும் கூறியதாவது:- இது அவசரயுகம், செய்யுள்வடிவில் அமைந்த பழம்பெரும் காவியங்கள் அனைத்தையும் ஆழமாக ஆராய்ந்து படித்து திளைத்து பயனுறுவதற்கு எல்லோராலும் முடியாது. ஆயினும் அந்தப் பேரிலக்கியங்கள் போதிக்கும் அடிப்படைமனிதப்பண்புகளை இன்றையசந்ததியினர்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும். அந்தப் பண்புகளை நன்மொழியில் புகட்டும்சாதனம்தான் இன்றைய சிறுகதை. இன்று சிறுகதையென்றபெயரில் நூற்றுக்கணக்கானவை நாள்தோறும் வெளிவருகின்றன. அவையனைத்தும் இலக்கியமாகுமா? சிறுகதை என்றபெயரில் உருவத்தில் பல தோன்றினாலும் மனிதனின் உள்ளத்தைப்பண்படுத்தி உயரச்செய்யும் உன்னத பணிபுரியும் இலக்கியமாகத்திகழ்பவை மிகச் சிலவே.



# இருப்பெடுக்கும் மலிவு விற்பனை

## புதுவருடப் பிறப்பை

முன்னிட்டு

கண்கவர் டிசைன்களில்

## சாறிகளும் றெடிமேட்

உடுப்புகளும்

மற்றும் உங்களுக்குத் தேவையான

## ஜவுளித் தினிசுகளும்

மலிவான விலைகளில் விற்பனை செய்கிறோம்.

கையிருப்பு முடியும் முன்

உங்களுக்குத் தேவையானவற்றை தெரிவு செய்யுங்கள்!

திருமண வைபவங்களுக்குத் தேவையான

## கூறை சாறிகள்

பலவிதமான டிசைன்களில் எம்மிடம் கிடைக்கும்.

# மைலன்ட்ஸ்

115, 117, காங்கேசன்துறை வீதி, - யாழ்ப்பாணம்.

கொலைவழக்கு

# பொலிசார் அளிக்கும் சன்மானம்

கொழும்பு, சனி

தெதுருஓயாவில் சென்ற மூன்று வாரங்களின்முன்னர் கண்டெடுக்கப்பட்ட தலையில்லா முண்டம் யாருடையதென அடையாளம் காணக்கூடிய வகையில் தகவல் தெரிவிப்பவருக்கு பொலிசார் 500 ரூபா சன்மானமாக வழங்கவிருக்கின்றனர்.

இந்த முண்டம் கொழும்பு நகரப்பொலிஸ்நிலையபிரேத அறையில் சென்ற 19 நாட்களாக வைக்கப்பட்டுள்ளது. இது இன்னும் சில நாட்களுக்கு இங்கே வைக்கப்பட்டிருக்குமென அறியப்படுகிறது.

நேற்று இருவர் இச்சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் தாம் தேடிவரும் தமது இனத்தவரல்ல எனத் தெரிவித்துவிட்டுச் சென்றார்கள். இதற்கிடையேபொலிசார் வெட்டப்பட்ட தலையைத்தேடும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றனர்.

# தற்கொலையில் விடாமுயற்சி

கேகாலை, சனி

பொத்துகெரஎன்னுமிடத்தில்தற்கொலைசெய்ய எத்தனித்த இளம் ஜோடி ஒன்று முதல்முயற்சி தவறியபின் இரண்டாம் முயற்சியில் வெற்றியீட்டிய தகவல் நீதிமன்றத்தில் தெரியவந்தது.

கே. பியசேன என்னும்30 வயது இளைஞனும்தர்மாவதி என்னும் யுவதியும் சென்ற வருடம்டிசம்பர் 21-ந் திகதி கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்ய முயற்சிசெய்ததாக பொத்துகெரபொலிசார்வழக்கொன்று தொடர்ந்திருந்தனர்.

இந்தவழக்கு மீண்டும் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதுவழக்கைவாபஸ் பெறப்போவதாக பொலிஸ் சார்ஜண்ட் தெரிவித்தார், 'ஏன்?' என்று கேட்டதற்கு "அவர்களிருவரும் தற்கொலை செய்து மாண்டுவிட்டனர்" என்று சார்ஜன்ட் பதிலளித்தார்.

# பௌத்த காங்கிரஸ் தலைவர் கருத்து

காலி, சனி

தேசிய அரசாங்கத்தின் ஒருவருட ஆட்சியில், பௌத்த சாஸனத்திற்காக, அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதென்று அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் திரு. எச். டபிள்யூ. அமரசூரியா, ஹினிதுமதொகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினார்.

# மின்னல் தாக்கி இருபெண்கள் மரணம்

கம்பஹா, வெள்ளி

இருபெண்கள் மின்னலால் தாக்குண்டு நேற்று மரணமானார்கள். மற்றொருபெண் அபாயகரமான நிலையில் எரிகாயங்களுடன் ருகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கலகெத்தியாவ மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 12 வயதான லில்லி குணவதியும், 18 வயதான லில். பி. மெனிக்காவும் தங்கள் வீட்டில் இருக்கும்போதே மின்னலால் தாக்குண்டனர்.

ஜகதல்பூர், ஏப். 9

சென்ற 25-ம், 26-ம் திகதிகளில் பஸ்தாரில் ஏற்பட்ட கிளர்ச்சி பற்றி ஒரு நபர் கமிஷன் நேற்று ஸ்தலத்தைப் பார்வையிட்டது. அப்போது அரசியல் கட்சித் தலைவர்களும் உடனிருந்தனர்.

சினிமா விமர்சனம்

# பாரத நாட்டின் வீரபுத்திரன்

வஞ்சம், வஞ்சகம், மன்னிக்கும் மனப்பான்மை, இந்தமூன்று குணங்களையும் கொண்ட மூவருக்கிடையில் வீரபுத்திரன் வளர்கின்றான். படத்தின் பெயரில் மட்டுமல்ல வீரபுத்திரனை திரையிலும் காண்கின்றோம்.

விக்கிரமனாக (வீரபுத்திரன்) வரும் உதயகுமார் எதிரிகளுடன் பொருதும்போது காட்டும் வீரம், திறமை உற்சாகமளிக்கிறது. அவரது ஒவ்வொரு இடிக்கு மின்னலால் தாக்குண்ட நாகம்போல் எதிரி சாய்கிறார். சாய்ந்து கிடக்கும் ரசிகர்கள் எழுகிறார்கள். வாள் சண்டையில் ரஞ்சனை நினைவூட்டுகிறார் குதிரையோட்டம் படத்தின் விறுவிறுப்புக்கு துணை புரிகிறது.

நாகேந்திரராவ் சமஸ்தான ராஜாவாக வந்து சதித்திட்டங்களை அடுக்கடுக்காகப்போட்டு தோல்வி அடைகிறார். எனினும் நடிப்பில் வெற்றிதான்.

மகாராஜாவாக வருபவர் தமது பாகத்தை உணர்ந்து நடித்துள்ளார்.

சரோஜாதேவி காதல் கட்டங்களில் கனிகிறார். அவரதுநடனங்களும் கவர்ச்சியாக அமைந்துள்ளன. சந்தியா வீணை மீட்டும் போது அவர் ஆடும் நடனம் ஒரு சான்று. கல்யாணகுமாருக்கு சிறிய பாகம் தான்; எனினும் கொடுத்த பாகத்தை சோடைபோகாமல் செய்துள்ளார்.

சமூகப்படங்களையே பார்த்துச் சலிப்படைந்தவர்களுக்கு இது ஒரு திருப்பமாக இருக்கும். சில குறைபாடுகள் இருந்தாலும் நல்ல சண்டைக் காட்சிகளுக்காகவும் சாகசக்காட்சிகளுக்காகவும் பார்க்கக்கூடிய நல்ல பொழுதுபோக்குப் படம் 'பாரத நாட்டின் வீரபுத்திரன்'. இப்படம் இப்போது யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் திரையிடப்படுகிறது.

— கணேஷ்

# பெண்களுக்கு அதிக வேலைவாய்ப்பு

கண்டி, சனி

பொல்கொல நெசவுநிலையத்தில் மேலும் 60 கிராமப்புற யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்துக்கென கட்டப்பட்ட புதிய கட்டிடத்தை உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா சமீபத்தில் திறந்து வைத்தார்.

# புதுவருட உத்தியோகத்தர்

பூநகரி, சனி

பூநகரி மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர்சங்கவருடாந்தக்கூட்டத்தில் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. சேதுகாவலர், உபதலைவர்: திரு. நா. இராமலிங்கம், காரியதரிசி: திரு. அ. த. இராசேந்திரம், தனாதிகாரி: திரு. சி. சதாசிவம், திருவாளர்கள் ம. சின்னப்பு, சி. வைரவநாதன், செ. சிவபாதசுந்தரம், வ. நடராசா ஆகியோர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

# சனசமூக நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடஅளவை சனசமூக நிலைய18-ம் ஆண்டு நிறைவு விழாவும் பொதுக்கூட்டமும் இம்மாதம் 12-ந் தேதி செவ்வாய்க்கிழமை, அளவெட்டி வடக்குசனசமூகநிலையத்தில் நடைபெறவிருக்கிறது

திரு. வை. இராசதுங்கம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திரு,கே ஹரன்,திரு. வ. பொன்னம்பலம், திரு. ரி. முருகேசம்பிள்ளை மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

# நட்சத்திர கிரகம்

கேப்கென்னடி, ஏப். 9

நட்சத்திரங்கள், நட்சத்திரக் கூட்டங்கள், அவைகளுக்கிடையேயான பொருட்கள் ஆகியவற்றைப் படம் பிடித்தனுப்புமுகமாக வான சாஸ்திர அவதான நிலையம் ஒன்றை அமெரிக்கா அனுப்பியிருக்கிறது.

அமெரிக்கா அனுப்பிய ஆளில்லா கிரகங்களில் இதுவே மிகப்பெரியது என்றும், அதன்நிறை 3900 ராத்தல் என்றும் அறிவிக்கப்பட்டது.

10 டெலஸ்கோப்புகளைக் கொண்ட இக்கிரகம் 500 மைல் உயரே பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கிறது.

# கப்பலில் தீ! ஐவர் பலி

ஹவானா, ஏப். 9

கியூபாவின் கிழக்குக்கரையில் நோர்வே பிரயாணக் கப்பலொன்று தீப்பிடித்ததால் 5 பேர் மாண்டனர். 3 பேரைக் காணவில்லை. 500 பேர் மீட்கப்பட்டனர்.

“ லேடன் ”

# LEYDEN

தயாரிப்புகள்:-

- பெனியன்
- ஸ்போட் சேட்
- ரீ சேட்
- நெரி சேட்
- நெற் பிளவுஸ்
- பேபி வெஸ்ட்
- கால்மேஸ் (Nylon & Cotton)

## லேடன் காமென்ஸ்

32A, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## புலோலிக் கிராமசபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

## கொம்பவுண்டர் தேவை

மேற்படி பதவிக்கு புலோலிக் கிராமசபை எல்லைக்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு தபாலின் இடதுபக்க மேல் மூலையில் "கொம்பவுண்டர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு கிராமசபைத் தலைவருக்கு 17-4-66-ல் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

. சம்பளம் ரூபா 35-00-ம் அரசாங்க விகிதப்படி படிகளும்.

2. விண்ணப்பகாரர் ஆகக் குறைந்தது கனிஷ்ட தராதரப்பத்திரமுடையவராகவும், ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவராகவும், நல்ல கையெழுத்துடையவராகவும் இருத்தல்வேண்டும்.

3. 31-4 66-ல் 18 வயதுக்குக்குறையாதவராகவும் 25 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும்.

4. பதவிக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர் இருவருடங்களுக்குத் தகுதிகாண் நிலையில் பதவி வகிக்கவேண்டும்.

5. அண்மையில் பெறப்பட்ட இரு நற்சாட்சிப்பத்திரங்களி பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

த. சிதம்பரப்பிள்ளை.
பதில் தலைவர்,
புலோலிக் கிராமசபை.

புலோலிக் கிராமசபைக் கந்தோர், பருத்தித்துறை,
6-4-66. 121

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி
நடித்த
தெய்வத்தின் தெய்வம்

மென்பந்துக் கிரிக்கெட்

## வெற்றி தோல்வி இல்லை

குரும்பசிட்டி, சனி

குரும்பசிட்டி உதயதாரகை மன்ற மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி அமைப்பின்கீழ் உரும்பராய் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்திற்குமிடையே உரும்பராய் மைதானத்தில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக்கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியைச் சேர்ந்த தாசன் என்பவர் 55 ஓட்டங்களைப்பெற்றார்.

பின்னர் விளையாட ஆரம்பித்த உரும்பராய் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸை ஆட ஆரம்பித்த யாழ்ப்பாணக் கோஷ்டி 62 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. உரும்பராய் கோஷ்டி பந்தெறி வீரர்சிவசத்தியசீலன் 9 ஓட்டங்களைக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

## அயர்லாந்து வாபஸ் இல்லை

டப்ளின், ஏப்ரல் 9

ஐ. நா. காரியதரிசியு தாண்ட் கேட்டுக் கொண்டதற்கிணங்க சைப்பிரஸ் ஐ. நா. அமைதிப்படையிலிருந்து துருப்புக்களை வாபஸ் பெறுவதில்லை என அயர்லாந்து தீர்மானித்திருக்கிறது.

REGAL—JAFFNA
NOW SHOWING!
ROD CAMERON
RORY CALHOUN
in
THE GUN HAWK
(in Color)

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-00, 6-30, 9-45க்கு மட்டும்
பாரத நாட்டின்
வீரபுத்திரன்
4 45க்கு மட்டும்
MY SIX LOVES

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தேங்காய் பழத்தை என்ன செய்வது? சற்று வாக்குவாதத்துக்குப்பின் குறைந்த தட்சணைபெற்று கற்பூர தீபாராதனை செய்தார். அத்தாயும் ஒருவித ஆறுதலுடன் திரும்பினார். தட்சணை விவரங்களை போர்ட் பலகையில் எழுதி அறிவிப்பது நல்லது.

ஃ ஃ ஃ

முன்னர் தீட்சதர் குடும்பத்தார் ஆங்கிலம் படிப்பதில்லை. இக்காலத்தில் பலரும் படித்துப் பெரிய பட்டங்கள்பெற்று உத்தியோகத்திலும் இருக்கிறார்களாம் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் தீட்சதர்களுக்குக் கோவில் முறையுண்டா என்று விசாரித்ததில் அவர்கள் தலையை 'கிராப்' வெட்டிக்கொள்ளாமல் இருந்தால் பூசைமுறை உண்டென்று அறிந்தேன். அவர்களிடையே அதிக கட்டுப்பாடு இருக்கிறது. கோவிலை அவர்கள் பெரிதும் கண்காணித்து வருவதாயும் பூசையை ஆகம முறைப்படி மிக பக்திசிரத்தையாகச் செய்வதாயும், அவர்களைப்பற்றி வேறு குறை கூறும் அன்பரே சொல்லிப் பாராட்டினார்.

கோவில் சுற்றுமதில் திருப்பணிவேலை நடந்துவருகின்றது. இதற்குப் பணம் கொடுத்தவர்களின் பெயர் விபரங்களைக் கொட்டை எழுத்தில் கோவில் முன்பு தொங்கவிட்டுள்ளனர். இத்திருப்பணிக்குச் சில லட்சம் ரூபாய்கள் தேவைப்படும். ஆனால் சேர்ந்துள்ள பணமோ மிகக் குறைவுதான். தமிழ் மன்னர்கள் ஆட்சிநடந்தால் இந்தக் கோவில் இப்படியிருக்குமா? வெளிப் பிரகாரங்கள் பாழாக இடிந்து கிடப்பதைக்காண மிக வேதனையாக இருந்தது. அரசாங்கத்துக்கு இதில் பொறுப்பில்லையா? பௌத்த ஸ்தலங்களின் திருப்பணிக்குப் பல லட்சம் செலவிட்ட இந்திய அரசாங்கம் இக்கோவில் திருப்பணிக்கு ஏன் உதவக்கூடாது? சைவ எம். பி.மார்கள் இதற்கு ஏன் முயற்சிக்கவில்லை? இலங்கை உள்ளிட்டுப் பல தூர இடங்களிலிருந்து தரிசனத்துக்காக அதிக யாத்திரீகர் வரும் இந்த ஸ்தலத்துக்கு உதவாமல் இப்படி அலட்சியமாக இருப்பது ஒரு 'செக்யூலர்' அரசாங்கத்துக்கும அழகாகமாட்டாது. இதைப்பற்றிக் கேட்கவும் கூடத் தமிழகத்தில் ஓர் ஆளும் கிடையாதா? ஹே நடராசப்பெருமானே!

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருப்பதாகச் சொன்னதும் தீட்சதர்களுக்கு அதிக மகிழ்ச்சி. விசேஷ உபசாரங்களெல்லாம் நடக்கிறது முன்காலத்தில்இங்கு யாழ்ப்பாணத்தவர் கூட்டம் தான் அதிகம். ஆனால் புதிய சட்டங்களால் அவர்கள் வருவது மிகமிகக் குறைந்துவிட்டது. புதிய அரசாங்கம் இலங்கையில் வந்துள்ளதால் யாத்திரைக் கெடுபிடி தடைகள் தளருமாவென்று ஒரு தீட்சதர் ஆவலுடன் கேட்டதுடன் நடேசப்பெருமானிடம் இதற்காகத் தினசரி பிரார்த்தனை செய்வதாகவும் கூறினார் மறுநாள் பத்திரிகையில் பார்த்தேன். இலங்கையர் விமானமூலம் டிக்கெட் பெறுவதற்கு எக்ஸ்சேஞ்ச் பர்மிட் தேவையில்லை என்ற செய்தியைக் கண்டதும் அந்த நடேசரே கண்திறந்துவிட்டாரென்று தெரிந்தது. இப்போது கப்பலும் ஓட ஆரம்பித்துவிட்டது. இனி யாழ்ப்பாணத்தவர் அதிக [illegible] போகப்போகிறீர்கள்?

இப்பொழுது திரையிடப்படுகிறது!
புத்தாண்டு வெளியீடு
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்
(9 மாறுபட்ட வேடங்களில்)
சாவித்திரி
நடித்திருக்கும்
ஸ்ரீவிஜயலக்ஷ்மிபிக்சேர்ஸ
நவராத்திரி
இசை: கே. வி மகாதேவன்
கதை, வசனம் ஏ பி. நாகராஜன்

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நெசவாளர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். கைத்தறி சேலைகளுக்கு பூப்போடும் பற்றேன் (Pattern) புத்தகங்கள் எம்மிடமிருந்து வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம். எஸ். சவிரிமுத்து, 73, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம். 36

ஹம்பர் சுப்பர் ஸ்னைப் (Humber Super Snipe) C L இலக்கத் தொடர்புடைய, நல்லநிலைமையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. 78000 மைல்கள் ஓடியது. நல்ல பாவனையிலுள்ளது. இரண்டாவது சொந்தக்காரரால் பாவிக்கப்பட்டது. விபரங்களுக்கு ஓட்டோஸ் லிமிட்டெட் யாழ்ப்பாணம். தொலைபேசி; 496. 45

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு**

கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்களும் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## செய்திச் சுருக்கம்

அக்கரைப்பற்று கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறை வட்டாரமென அழைக்கப்பட்டு வந்த வட்டாரம் தற்பொழுது நிந்தாவூர் வட்டாரமென பெயர் மாற்றப்பட்டிருப்பதாய் தெரிய வருகிறது.

ஃ ஃ ஃ

கட்டுக்கம்பளை தேர்தல் ஆட்சேப மனு மீதான தீர்ப்பை நீதியரசர் திரு. சிறிஸ்கந்தராசா ஒத்திவைத்துள்ளார். திரு. ரி. பி. சுபசுங்கா கட்டுக்கம்பளை தொகுதிக்கு தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து இம்மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

சாம்பல்தீவு மாதர் முன்னேற்றச்சங்கக்கூட்டம்சாம்பல்தீவு மெ. மி. பாடசாலையில் நடைபெற்றபோது காரியாதிகாரி நெசவுநிலையம் ஒன்றை அமைக்க நன்கொடை கிடைத்துள்ளதாக கூறினார்.

ஃ ஃ ஃ

"சாதிபேதங்களையும்அரசியல் குரோதங்களையும் மறந்து எமது கிராமங்களின் தேவைகளைசிரமதானமுறையில்நாங்களே செய்துகொள்வோமானால் இலங்கையின் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கும்" என்று மித்தெனியா வெலிப்பிடியில் நடைபெற்ற கூட்டத்தில் அம்பாந்தோட்டை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாந்து கூறினார்,

ஃ ஃ ஃ

நெரியவில்லைதோட்டவள்ளுவர் மறுமலர்ச்சி மன்றத் தலைவராக திரு. அழகுமலையும், செயலாளராக திரு அன்பழகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஃ ஃ ஃ

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கூனமில்லைக் கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவற்காச், சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம், என்றுவந்தாய் எனும் எம்பெருமான் திருக்குறிப்பே.

—அப்பர் சுவாமிகள்

### தேவை

விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். விஜயகம் இன்டஸ்றீஸ், 39, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம். 37

எமது தயாரிப்பிலுள்ள பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆண் - பெண் விற்பனையாளர்கள் தேவை. 13—4—66க்குமுன் வரவும். பாஸ்கரன் இன்டஸ்றீஸ் 44/3 கொலீச் லேன், நீர்வாவியடி, யாழ்ப்பாணம். (வசந்தா சேலை அச்சகத்துக்கு அருகாமை). 43

கொந்தருத்து முறையில் கொழும்பில் உழவு மெசின் ட்ருக்டரில் மண் எடுத்துச் செல்வதற்கு ட்ருக்டர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் லாறிகள் ட்ருக்டர் லைசென்ஸ் உள்ளவர்களாயிருக்க வேண்டும். அத்துடன் ரொக்கமாக பிணைப்பணமும் கட்டவேண்டும். விபரங்களுக்கு: கே. சண்முகம், 86, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டியா. 39

கொழும்பில் ட்ருக்டர்கள் லோடேர்ஸ், புல்டோசேர்ஸ் முதலியவற்றில் வேலைசெய்வதற்கு மெக்கானிக்குகள் தேவை. பிரசித்திபெற்ற ஸ்தாபனங்களில் வேலைசெய்து பல கால அனுபவம் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். விபரங்களுக்கு கே. சண்முகம், 86, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டியா. 40

கொந்தருத்து முறையில் கொழும்பில் வேலைசெய்வதற்கு புல்டோசர் சாரதிகள் தேவை. மனுச்செய்வோர் ரொக்கமாக பிணைப்பணம் கட்டவேண்டும். கே. சண்முகம், 86, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டியா. 41

வாகனங்கள் திருத்துவதற்கு மின்நுட்பத் தொழிலாளர் தேவை. விபரங்களுக்கு கே. சண்முகம், 86, அவிசாவளைவீதி, வெல்லம்பிட்டியா. 42

பெண்கள் சேவை இலங்கையில் பல பகுதிகளில் இம்மாதம் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் பெரும் சினிமா நட்சத்திர கலைநிகழ்ச்சிகளில் வெளியீட்டுமலர் டிக்கட் விற்பனைக்கு தேவை. பிரயாண, சாப்பாட்டு வசதிகளுடன் தினம் 7-50 கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும்; 27, மெயின் ஸ்றீற், யாழ்ப்பாணம். 23

நெசவு வேலைசெய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. சி பி. சிங்கம், 158, சட்டநாதர் ரோட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 49

## நிருபர்களுக்குக் காட்டப்பட்டது

மாட்ரிட், ஏப். 9

மூன்று மாதங்களுக்கு முன் ஸ்பெயின் கடலில் மூழ்கிப்போய் மீண்டும் எடுக்கப்பட்ட அமெரிக்க அணுகுண்டு நேற்று 100 பத்திரிகையாளர்களுக்குக் காட்டப்பட்டது.

இக்குண்டு அமெரிக்காவுக்கு எடுத்துச்செல்லப்படும்.

### பிரவேசங்கள்

ஜி. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், உயர்தரம் கலை/ விஞ்ஞானம், பிறெப்! விஞ்ஞானம் வகுப்புக்களுக்கு இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்படும். விடுதி வசதிகள் உண்டு.

ஐக்கியகலாசாலை
நெல்லியடி, கரவெட்டி/
107, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஹாக்கி வீரர்களுக்கு தயான்சந்த் பயிற்சி

## பெரும் கௌரவம் என கருத்து

கொழும்பு, சனி

உலகத்தின் தலைசிறந்த ஹாக்கி வீரரான தயான் சந்த். இலங்கை ஹாக்கி வீரர்களுக்குப் பயிற்சியளிக்கும் உத்தரவாதம், டில்லி ஹாக்கி சங்கத்தினதும், அகில இந்திய பெண்கள் ஹாக்கி சங்கத்தினதும் காரியதரிசியான திரு. கர்டார் சிங்கினல் அளிக்கப்பட்டிருப்பது இங்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்திவிருக்கிறது.

கொழும்பு ஹாக்கி சங்க உபதலைவர் திரு. வால்டர் ஜயசூரியாவுக்கு இந்த உத்தரவாதம் அவசரத் தபால் மூலம் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஹாக்கி சரித்திரத்திலேயே மிகப்பெரும் அதிசய வீரர் எனப்படும் தயான் சந்த். இரு தினகளுக்கு மட்டுமே இலங்கை வீரர்களைப் பழக்குவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் 4 தினங்கள் அவர் பயிற்சியளிப்பதற்கேற்ப அவருக்கு வசதி ஏற்படும் என திரு. ஜயசூரியா பெருநம்பிக்கை கொண்டிருக்கிறார்.

தயான்சந்தை இனிப் பட்டமுறையில் சந்திப்பதே பெரும் கௌரவம் என ஸ்தல ஹாக்கி வீரர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்நிலையில் அவரிடம் பயிற்சி பெறுவது, வாழ்க்கையில் என்றும் நினைவில் கொள்ளத்தக்கது என்பது அவர்கள் கருத்து.

இலங்கை வீரர்கள் பிரபல பயிற்சி ஸ்தலமான பாட்டியாலாவுக்குச்சென்று பயிற்சி பெறுவார்கள். 13 இலங்கை வீரர்கள் செல்வார்கள்.

கர்டார்சிங் இலங்கைக்கு ஏற்கனவே விஜயம் செய்திருக்கிறார். திரு. சிங்குக்கும் ஜயசூரியாவுக்குமிடையே இப்போது இவ்விஷயமாகத் தொடர்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கால் நூற்றாண்டுக்கு முன் இலங்கை வந்த தயான்சந்த், தனது அதிசய ஹாக்கி தடியின்மூலம் சர்வதேச ஒலிம்பிக் பார்வையாளர்களைப் போலவே, இலங்கை ரசிகர்களையும் பிரமிக்க வைத்து டசன்கணக்கான கோல்களைப் போட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## "பிஞ்சில் பழுக்காதே"

### நீதிபதி புத்திமதி

கல்கிசை, வெள்ளி

நுகேகொடையைச் சேர்ந்த 13 வயது யுவதியானசந்திரகுமார்என்பவரை ராமையா பிள்ளை பஞ்சாட்சரம் என்பவர் கடத்திச் சென்றதாகத் தொடரப்பட்ட வழக்கு கொழும்புதெற்கு மாஜிஸ்டிரேட் திரு. சிவா செல்லையா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டபோது 'பிஞ்சிலேயே பழுத்துவிடவேண்டாம்' என மாஜிஸ்டிரேட் அந்த யுவதியை எச்சரிக்கை செய்தார்.

விசாரணையின்போது சந்திராகுமாரி எழுதிய சில காதற்கடிதங்கள் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

மாஜிஸ்டிரேட் விசாரணையை இம்மாதம் 20-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## ரத்தாகும்

புதுடில்லி, ஏப். 9

இன்று புதுடில்லியில் ஆரம்பமான ராஜ்ய முதன்மந்திரிகள், உணவு மந்திரிகள் அடங்கிய மகாநாட்டில் உணவு மண்டலத்தை ரத்துச்செய்வதுபற்றிய ஆலோசனை விவாதித்திருப்பதாக மந்திரி சுப்ரமண்யம் அறிவித்தார்.

அதேசமயம் டில்லி வந்துள்ள பல முதன்மந்திரிகளுடன் பிரதமமந்திரி ஸ்ரீமதி காந்தி தனித்தனியாக ஆலோசனை நடத்தினார். அதன்பின் சில முதன் மந்திரிகளும். காஷ்மீர் தலைவரும், காங்கிரஸ் தலைவர் காமராஜுடன் பேசினார்கள்.

## கார் அகப்பட்டது

யக்கலை, ஞாயிறு

கொழும்பில்திருடப்பட்ட கார்ஒன்றைகம்பஹாஇன்ஸ்பெக்டர் டி. ஜெயசேகரா அக்கார் விற்பனை செய்யப்படும்போது கைப்பற்றினார்.

துறைமுக

## தொழில் தகராறுகளுக்கு நிரந்தர தீர்வு

திருகோணமலை, சனி

திருகோணமலைத் துறைமுகத் தொழில் தகராறுகளுக்கு நிரந்தரத்தீர்வு காணுமுகமாக திருமலை அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா எடுத்துவரும் நடவடிக்கைகளின் பலனாக துறைமுகத்தில்கடமையாற்றும் சகல தொழிலாளர்களும் அடங்கிய கூட்டுத்தாபனம் ஒன்று மே மாதம் முதல்திகதியிலிருந்து இயங்கலாமெனத் தெரிகின்றது.

## காரைக்கால் அம்மையார் ..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரமஸ்ரீ சோ. குருசாமி சர்மாபேசுகையில் மும்மலங்களின் பாதங்களையும் நீக்க இறைவனது பாதகமலத்தில் சரண்புகவேண்டு மென்றார்.

திரு. கே. கந்தையா நன்றி கூறினார்.

கைதடி இந்துவாலிபர்சங்கத்தின் ஆதரவில் இவ்விழா நடைபெற்றது.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆனைக்கோட்டை புளியங்கண்டு ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் அலங்காரத் திருவிழா இன்று நடைபெறும். ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெற்று பூர்த்தி பெறுகிறது. இன்று சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும் விநாயகப் பெருமான் தீப அலங்காரங்களுடன் வீதிவலம் வருவார்.

## புதிய பாடசாலை கட்டடம்

தம்பதெனியா, சனி

தெம்பதெனியாவில் பெற்றோர் ஆசிரிய சங்கத்தினால் 20,000 ரூபா செலவில் கட்டப்பட்ட ஒருகட்டடத்தை கல்விமந்திரி திரு. இரியகொல்லை திறந்துவைத்தார். இத்திறப்பு விழாவில் திரு. ஆர். ஜி. சேனநாயக்காவும் கலந்துகொண்டார்.

## இன்று உயிர்த் தெழுந்த ஞாயிறு

கொழும்பு, ஞாயிறு

இன்று உயிர்த்தெழுந்த ஞாயிறு. கிறிஸ்தவ பெருமக்கள்யேசுநாதர் உயிர்த்தெழுந்ததை நினைவு கூறுமுகமாக இன்று இத்தினத்தைக் கொண்டாடுகிறார்கள். நாடு பூராவிலும் உள்ள கிறிஸ்தவக் கோயில்கள் எல்லாவற்றிலும் விசேஷ பிரார்த்தனைகள் நடைபெறும்.

இன்று அரசாங்க, வங்கி விடுமுறை தினமாகும்.

## திருநாள் பஜனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் இன்று மாலை நடைபெறும்.

## வியட்னம் இழுபறி

சைகோன், ஏப். 9

தென்வியட்னாமில் டாநாங், ஹுவே ஆகிய நகரங்களிலிருந்து அமெரிக்கபிரஜைகளும், அவசியமற்ற இராணுவ வீரர்களும் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையின்மை தெரிவித்துள்ள இராணுவத் தளபதிக்குப் பதிலாக, தென்வியட்னாமின் வடபகுதிக்கு பொறுப்பான புதிய தளபதி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அதேசமயம், தாக்கப்பட்டால்திருப்பித் தாக்குவதாக கிளர்ச்சித்தளபதிகள் அறிவித்திருக்கின்றனர்.

## வெற்றிக் கேடயம் வழங்க ஏற்பாடு

வல்வெட்டித்துறை, சனி

எதிர்வரும் புதுவருஷதினத்தன்றுஅல்வாய்இந்துவாலிபர்விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் கரபந்தாட்ட இறுதிப்போட்டியில் வெற்றிபெற்ற கழகத்தினருக்கு முறையே திரு. க. சோமசுந்தரன் திரு. கே. வைரமுத்து ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயமும், திரு. எம். சிவசிதம்பரத்தின் வெற்றிக்கேடயமும் வழங்கப்படவிருக்கின்றது.

இப்போட்டி திரு.எம்.சிவசிதம்பரம் எம். [illegible] நடைபெறும்.

உலக உதைபந்தாட்டத்தில்

# அர்ஜண்டீனா மூன்றாவது ஸ்தானத்துக்கு வரும்?

புவனஸ்அயர்ஸ், ஏப். 9

வருகிற ஜூலை மாதம் இங்கிலாந்தில் நடைபெறவிருக்கும் உலக உதைபந்தாட்டப் போட்டியில் அர்ஜண்டீனா புதிய நோக்குடன் பங்குபற்றிக் கொள்ளும்.

அர்ஜன்டீனா, கடந்தகால உலக உதைபந்தாட்டங்களில் அற்புதவலுவுள்ள பாதுகாப்புக் கோஷ்டியாகச் செயல்பட்டு வந்தது. ஆனால் இம்முறை இந்தப் பழைய விஷயத்தை மறந்துவிட்டு தாக்குதல் கோஷ்டியாக விளங்க புதிய, உற்சாகமான, இளம் அர்ஜன்டீனா கோஷ்டிக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஜூன் 20-ம் திகதி 22 பேரடங்கிய அர்ஜன்டீனா கோஷ்டி ஐரோப்பா புறப்படும். இங்கிலாந்து சேருமுன் வழியில் செக்கோஸ்லோவேகியா, பெல்ஜியம், பிரெஞ்சு கோஷ்டி என அது விளையாடும். உலக சாம்பியன் பிரேஸில், இங்கிலாந்து ஆகியவற்றுக்கு அடுத்த 3-வது இடத்துக்கு வர அர்ஜண்டீனா கோஷ்டி முயலும். (பிடிஸி)

இந்தியாவில்

# நலாவது திட்டகாலத்தில் புதிய திருப்பம் ஏற்படும்

## பிரதமர் இந்திரா திருப்தி

புதுடில்லி, ஏப்ரல் 9

இந்தியாவில் நாலாவது திட்டகாலத்தில் விளைபொருள், உணவு சாகுபடி அம்சங்களில் புதிய திருப்பம் ஏற்படும் என்று இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி திருப்தி தெரிவித்துள்ளார்.

16 ராஜ்யங்களை சேர்ந்த முதன் மந்திரிகள்-விவசாய மந்திரிகள் ஆகியவர்களைக் கொண்ட கூட்டத்தில் திருமதி இந்திராகாந்தி உரை நிகழ்த்தினார்.

சமீபத்தில் வெளிநாடுகளுக்கு தாம் விஜயம் செய்ததைக் குறிப்பிட்டு திருமதி காந்தி பேசுகையில், எல்லாத்துறைகளிலும்நாம் தன்னிறைவுபெற முயற்சிசெய்கிறோம். அந்த முயற்சிகளில் வெற்றி பெறுவோம் என்று வெளிநாட்டு நண்பர்களுக்கு திருப்தி ஏற்பட்டால்தான் நமக்கு உதவி செய்வதில் அவர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவார்கள். எனவே வெளிநாட்டு உதவிகளை நாம் நிரந்தரமாக நம்பி இராமல் தன்னிறைவு பெறுவதில் ஆழ்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

பல ராஜ்யங்களிலும் கொந்தளிப்புகள் ஏற்படக் கூடிய நிலைமைகள் இருந்தே வருகின்றன. அந்த நிலைமைகளை நாம் சமாளிக்கத் தயாராக வேண்டும். எந்த நிலைமையையும் சமாளித்து நாட்டு மக்களின் பொதுவான நலன்களைப் பாதுகாப்போம் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் நாம் உருவாக்கிவைத்துவிட்டால் அவர்கள் எப்போதும் நம்பக்கமாகவே இருப்பார்கள் என்று திருமதி காந்தி முதன் மந்திரிகளிடம் கூறினார்.

உணவு மந்திரி திரு. சி. சுப்பிரமணியமும் பேசினார்.

## சேக்கிழார் விழா

### இந்திய அறிஞர் பேசுவார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் மே மாதம் 25-ந் திகதி நடைபெறவிருக்கும் சேக்கிழார் விழாவில் அண்ணமலைபல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் வித்துவான் வெள்ளைவாரணனார் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

சேக்கிழார் விழாவின் முதல்நாள் காலையில் அபிஷேக ஆராதனையோடு கூடிய குருபூசை நடைபெறும். இதற்குப் பொறுப்பாளர்களாக திருவாளர்கள் மு. ஞானப்பிரகாசம், சு. பரநிருபசிங்கம் ஆகிய இருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குருபூசையைத் தொடர்ந்து மகேசுரபூசை நடைபெறும். அப்போது மாணவமாணவிகளின் தேவாரதிருமுறைப் பாராயணங்களும், சைவப் பெரியார்களின் பிரசங்கங்களும் இடம் பெறும்.

சேக்கிழார் பெருமானின் திருவுருவப்பட ஊர்வலத்தோடு ஆரம்பமாகும் பிற்பகல் நிகழ்ச்சிகளில் ஒரு கருத்தரங்கம் நடைபெறும். இலங்கை அறிஞர்களும் இவ்விழாவில் கலந்துகொள்வர். கவியரங்கம் ஒன்றும் நடைபெறும்.

## இந்திரா-சாகிர்ஹுசேன் கிரிக்கெட் போட்டி

புதுடில்லி, ஏப்ரல் 9

பிரதமர் இந்திரா காந்தியின் கோஷ்டிக்கும் உபஜனாதிபதி சாகிர்ஹுசேன் கோஷ்டிக்கும் இடையில் இன்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பிரதமர் இந்திரா காந்தியின் கோஷ்டி வெற்றிபெற்றது.

இந்த கிரிக்கெட் போட்டியின் மூலம் கிடைக்கும் நிதி வசூல் உடல் ஊனம் பெற்ற குழந்தைகளின் நலனுக்குப் பயன்படுத்தப்படும்.


S. R. S.

ஜவுளி மாளிகையில்

C. W. E. புடவைகள்

கூ.மொ.வி.ஸ்தாபனத்தாரின் புடவைகள் 97-ம் இலக்க கூப்பனுக்கு கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

இன்னும்

கூப்பனின்றி

- 100-ம் நம். டக்கா சேலை
- 120-ம் நம். கைத்தறிசேலை
- 6 யார் வேயில் சேலை
- கைத்தறி சேலை
- கைத்தறி சாரம்
- சருகை வேட்டி
- சருகை சால்வை
- ஜப்பான் பீஸ் வேட்டி (புரு மாாக்)

முதலியன

நிதானமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ்.ஆர்.செல்லத்துரை

(கூ. மொ. வி. அங்கீகாரம் பெற்ற புடவை வர்த்தகர்)

216, கே.கே.எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

போன்: 296



வியாபாரம் பெருக விளம்பரம் செய்க



கூ. மொ. வி. ஸ்தாபனத்தாரின் புடவைகள்

கூப்பனுடன் கட்டுப்பாட்டு விலைகளுக்கே பெற்றுக்கொள்ளலாம்.

இத்துடன்

எமது சொந்த தறிகளில் தயார் செய்த

கைத்தறிச் சேலைகள்

மலிவு விலைகளில் கிடைக்கும்.

சண்முகானந்தா

ரெக்ஸ்ரைல்ஸ்

58, பெரியகடை, போன்: 7232 யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org